**செ.வெ.எண்.168** **நாள் : 15.12.2016**

**“வர்தா” புயலால் விழுந்துள்ள மரங்களை அகற்றும் பணியில் 21200 மாநகராட்சி மற்றும் நகராட்சி பணியாளர்களுடன் கூடுதலாக திறன்வாய்ந்த 540 மர அறுவை பணியாளர்களுடன் மரங்களை அகற்றும் பணி நடைபெறுகிறது. இன்று மட்டும், 7390 டன் மரக்கழிவுகள் மற்றும் குப்பைகள் அகற்றம் – மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தகவல்**

தமிழக அரசின் உத்தரவின்படி, வடகிழக்கு பருவமழை முன்னிட்டும், வர்தா புயல் உருவானதைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து நான்கு கட்டமாக ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் தலைமையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., 15 மண்டல கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்கள், துணை ஆணையாளர்கள், நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், சென்னை ஆட்சியர் அலுவலகம், பொதுசுகாதாரத்துறை, மருத்துவத்துறை, தமிழ்நாடு குடிசைமாற்று/வீட்டுவசதி வாரியம், சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம், மீன்வளத்துறை, சென்னை தொலைபேசி, தீயணைப்புத்துறை, இராணுவத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வழங்கல் துறை போன்ற அனைத்து துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நான்கு முறை நடத்தப்பட்டது.

வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மழைநீர் எளிதில் செல்ல ரூ.18 கோடி செலவில் 1229 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரப்பட்டது. 33 புதிய மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் 52 இணைப்பு மழைநீர் வடிகால்வாய்கள் ரூ.91 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. மூலதன

நிதியிலிருந்து கேப்டன் காட்டன் மற்றும் கொடுங்கையூர் கால்வாயில் ரூ.27.87 கோடி மதிப்பீட்டில் 2.52 கி.மீ. நிளத்திற்கு 5 தடுப்புச்சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பொதுப்பணித்துறையின் மூலம் அடையாறு, கூவம் மற்றும் எண்ணூர் ஆகிய முகத்துவாரங்களில் தூர்வாரி தயார்படுத்தப்பட்டது.

ஆய்வுக்கூட்டத்தில், வர்தா புயல் 120–130 கி.மீ. வேகத்தில் 12.12.2016 அன்று சென்னையை கரையை கடக்கும் என வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையினை தெரியப்படுத்தி, கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களும் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் இருந்து அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை உடனுக்குடன் கட்டுப்பாட்டு அறைக்கு தெரியப்படுத்தி பணிகளை துரிதப்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு தேவையான தகவல்கள் செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி வாயிலாக பொதுமக்கள் அச்சப்படாமல், பதற்றமடையாமல் இருப்பதற்காகவும், ஆட்டோ மூலம் ஒலிப்பெருக்கியின் வாயிலாக கடற்கரை மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிப்போர் மேடான பகுதிகளுக்கு செல்லுமாறும், புயல் கரையை கடக்கும் போது வெளியில் செல்ல வேண்டாம் எனவும், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் அருகில் உள்ள நிவாரண முகாம்களுக்கு செல்லுமாறும், மரங்களின் கீழ் வாகனங்கள் நிறுத்துவதையும், தங்குவதையும் தவிர்க்க வேண்டும் என உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டது.

வர்தா புயலின் போது, 108 மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளும், மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட 35 இடங்களில் 10 இடங்களில் படகுகள் மீட்புப் பணிக்காக தயார்நிலையில் வைக்கப்பட்டது. 43 மீட்புக் குழுக்கள் மூலம் மீட்புப் பணிகள் நடைபெற்றது. பொதுமக்களை தங்க வைப்பதற்காக குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் அடிப்படை வசதிகளுடன் 176 நிவாரண முகாம்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டு, 27 முகாம்களில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டனர். அம்மா உணவகங்கள் மற்றும் 4 பொது சமையல் கூடங்களில் உணவு தயாரிக்கப்பட்டு, 1,05,909 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டது. சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் மூலம் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள பொதுமக்களை மாற்றிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

நிவாரண முகாம்களில் தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், பள்ளி ஆசிரியர்கள்/ஆசிரியைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பணியாளர்கள் மூலம் சேவை மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மழைக்காலங்களில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் பரவாமல் தடுத்திட **51 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள்** நடத்தப்பட்டு வருகிறது.

மழைக்காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுத்திடவும், கொசுக்களை கட்டுப்படுத்திடவும் **3,337 மலேரியா தொழிலாளர்களுடன் 420 அழுத்த தெளிப்பான்கள், 245 கையினால் இயக்கும் புகையடிக்கும் கருவிகள் மற்றும் 41 வாகன புகையடிக்கும் கருவிகள்** மூலம் மருந்து தெளிக்கப்பட்டு, நோய்கள் பரவாமல் தடுக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் **16** சுரங்கப்பாதைகளில் **38** உயர் அழுத்த மின்மோட்டார்கள் மற்றும் சூப்பர்சக்கர் வாகனங்களும், நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பராமரிக்கப்படும் **6** சுரங்கப்பாதைகளில் உயர் அழுத்த மின்மோட்டார்களை தொடர்ச்சியாக இயங்கும் வண்ணம் பரிசோதித்து தயார்நிலையில் வைக்கப்பட்டதனால், மழைநீர் தேங்காமல் சீரான சாலை போக்குவரத்து நடைபெறுகிறது.

தேங்கிய மழைநீர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான **622** பம்புகள் மூலம் அகற்றப்பட்டது. அதுமட்டுமின்றி முதன்முறையாக அதிக உயர்திறன் கொண்ட **75** எச்.பி. பம்புகள்–**2**, **50** எச்.பி. பம்பு–**1**, **35** எச்.பி. பம்புகள்–**7**, **10** எச்.பி.–**10** என மொத்தம் **20** பம்புகள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது. மழையின்போது **18** உயர்கோபுர மின்விளக்குகள் மூலம் இரவுநேரங்களில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வர்தா புயலினால் **3,417**க்கும் மேற்பட்ட தெருவிளக்கு கம்பங்கள், **1,241** தெருமின்விளக்குகள் பழுதடைந்துள்ளது. அனைத்தும் போர்க்கால அடிப்படையில் விரைந்து சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

‘‘வர்தா’’ புயல் காரணமாக சாலையோரம், அலுவலக வளாகங்களில் உள்ள மரங்கள் என மொத்தம் **13,630** மரங்கள் விழுந்துள்ளது என கணக்கிடப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் **18,000** பணியாளர்களுடன் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட **3200** பணியாளர்கள் என மொத்தம் **21,200** பணியாளர்களுடன், **295** மர அறுவை

இயந்திரங்கள், 204 ஜே.சி.பி இயந்திரங்கள் மற்றும் 354 லாரிகள் ஆகியவற்றைக் கொண்டு 8,604 மரங்கள் போர்க்கால அடிப்படையில் அகற்றப்பட்டது.

இவை மட்டுமல்லாது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் உத்திரவின் பேரில், கோவை மாவட்டம், வால்பாறை, ஆனைக்கட்டி பகுதிகளிலிருந்தும் மற்றும் நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் மரங்களை அகற்றும் பணிகளில் பணியாற்றும் திறன்வாய்ந்த 540 பணியாளர்கள், 125 மர அறுவை இயந்திரங்களை கொண்டு இன்று (15.12.16) காலை முதல் சென்னை மாநகரில் சாய்ந்து கிடந்த மரங்களை அப்புறப்படுத்தும் பணிகளை மாநகராட்சி பணியாளர்களுடன் இணைந்து போர்கால அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இன்று மட்டும், பெருநகர சென்னை மாநகராட்சியில் சேகரிக்கப்பட்ட மழையினால் விழுந்த மரக் கழிவுகள் மற்றும் குப்பைகள் மொத்தம் 7,390 டன்கள் அகற்றப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044–2561 9206, 2561 9511, 2538 4965, 2538 3694, 2536 7823, 2538 7570 என்ற தொலைபேசி எண்களிலும், 9445477207, 9445477203, 9445477206, 9445477201, 9445477205 என்ற வாட்ச் அப் (Whatsapp) எண்களிலும், gccdm1@chennaicorporation.gov.in, gccdm2@chennaicorporation.gov.in, gccdm3@chennaicorporation.gov.in, gccdm4@chennaicorporation.gov.in, gccdm5@chennaicorporation.gov.in ஆகிய மின்னஞ்சல் வழியாகவும், பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டும், கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி வாயிலாக கண்டறியப்படும் புகார்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியின் வசமுள்ள 1096 வாக்கி டாக்கிகள் மூலம் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு, மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து மீட்பு நடவடிக்கைகளும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி

இஆப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., ஆகியோருடன் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**